**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**S.T.C. No. 793–2023**

| L.W.1 P.W.1 | | |
|---|---|---|
| Name: | பஞ்சநாதம் | Caste: |
| Father's Name: | தருமையன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:80/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

(எதிரி 2 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை. ஒன்றாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317–இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முன் விசாரணை:**

நான் தற்போது வெள்ளிக்கிடங்கில் குடியிருந்து, தலைமை ஆசிரியராக பணிபுரிந்து தற்போது ஓய்வில் இருந்து வருகிறேன். என்னோடு பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து மொத்தம் 5 நபர்கள் ஆவோம். எங்களுக்குள் பாகப்பிரிவினை நடநதாகிவிட்டது. கடந்த 14.10.2022–ஆம் தேதி பகல் 11.00 மணியளவில், டிராக்டர் வைத்து, எனது வயலில் உழவு வேலை செய்வதற்காக வயலில் இருந்தபோது, எனது அண்ணன் மகன் கருணாகரன் டிராக்டரை வேலை செய்ய விடாமல் தடுத்து நிறுத்தினார். குச்சிக்காரி மகனே, டிராக்டரை கீழே இறக்கி விடுடா என்று என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார். சம்பவ இடத்திலிருந்து டிராக்டர் டிரைவர் உடனே ஓடிவிட்டார்.

நான் 10 ஆண்டு காலமாக எனது வயலில் விவசாயம் செய்து வருகிறேன். எதற்காக என்னை தடுக்கிறாய் என்று கேட்டதற்கு கருணாகரன் என்னை செருப்பால் தலையில் அடித்தார். நான் தடுத்துக் கொண்டே பின்னோக்கி சென்றபோது, கீழே விழுந்துவிட்டேன். அப்போது, ஓடி வாருங்கள் என்று நான் சத்தம் போட்டேன் (சாட்சி அழுது கொண்டே சாட்சியம் அளித்தார்). எனது வயலில் விவசாய வேலை செய்து கொண்டிருந்தவர்கள் வந்து, எனது முகத்தில் தண்ணீர் தெளித்து, என்னை ஆசுவாசப்படுத்தினர். அதன் பிறகு, கருணாகரன் மற்றும் குமார் அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

சம்பவத்திற்கு மறுநாள் வாய்மேடு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகாரானது அ.த.சா.ஆ1–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

நான் வேதாரண்யம் தாலுக்கா, வெள்ளிக்கிடங்கில் வசித்து வருகிறேன். வெள்ளிக்கிடங்கு கிராமத்திற்கும், திருக்குவளை தாலுக்கா ஆய்மூர் கிராமத்திற்கும் சுமார் 20 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரி. எனது புகாரில், சுடுகாட்டிற்கு அருகில் சம்பவம் என கொடுத்துள்ளேன் என்றால் சரி. மேற்படி சம்பவத்தை யார், யார் பார்த்தார்கள் என்று புகாரில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. எனக்கும், எதிரிகளுக்கும், சொத்து சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறதா என்றால், இல்லை. எங்களுக்குள் சிவில் வழக்கு எதுவும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதா என்றால், இல்லை.

சம்பவத்தின் போது, அருகில் உள்ள வயல்களில் யார், யார் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரி. எனது வயலுக்கு உழவு வேலை செய்ய வந்த டிராக்டரின் விவரங்களை எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரி. மேற்படி புகாரில் டிராக்டரின் ஓட்டுநர் பெயரையும் குறிப்பிடவில்லை என்றால் சரி. சம்பவம் குறித்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, அதற்கான ஆவணங்களை காவல் நிலையத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

பொதுப்பாதை சம்பந்தமான வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பொதுப்பாதை அனைத்து பொது மக்களும் பயன்படுத்தக்கூடிய பாதை என்றால், சரி. மேற்படி பாதை வழியாக சென்றுதான் சுமார் 400 ஏக்கர் நிலங்களை பொதுமக்கள் சாகுபடி செய்து வருகின்றனர் என்றால், சரி. பாதை அடைப்பு சம்பந்தமாக பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால், சரி. மேற்படி பொதுப்பாதை அடைக்கபட்டிருந்தால், மேற்படி 400 ஏக்கர் நிலங்களில் சாகுபடி செய்து வருபவர்கள் புகார் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

நான் கொடுத்த பொதுப்பாதை அடைப்பு சம்பந்தமான புகார் தொடர்பாக, வருவாய் துறையினர் சம்பவ இடத்தை பார்த்து விசாரித்தார்களா என்றால், விசாரித்தார்கள். நான் நீதிமன்றம் மூலமாக தனிப் புகார் கொடுத்ததன் அடிப்படையில் தான், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரி. மேற்படி புகாரில் வருவாய்துறையினரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரி. உண்மையில் சம்பவம் நடைபெறாத காரணத்தால் தான், அவர்களை சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றும், அதனால் தான் நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

நான் முதன் முதலில் காவல் துறையில் புகார் கொடுத்தபோது, போலிசார் என்னை சிவில் நீதிமன்றத்தில் பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தினர் என்றால் சரி. எனக்கும், எதிரிகளுக்கும் சிவில் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது, அதனை சிவில் நீதிமன்றத்தில் தீர்த்து கொள்ள வேண்டுமே தவிர, குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி.2 அருள்ஜோதி எனக்கு பழக்கமானவர் மற்றும் உறவினர் என்றால் சரி. என்னுடைய நலனுக்காக, எனது சம்பந்தப்பட்ட அனைத்து காரியங்களிலும், துணையாக இருப்பார் என்பதால், அவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரி.

மாதிரி வரைபடத்தில் சம்பவ இடமானது, எனது வயலாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. சிவில் நீதிமன்றத்தில் தீர்த்து கொள்ள வேண்டுமே தவிர, குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், எதிரிகளை பழிவாங்க கூடாது என்றும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 01.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## S.T.C. No. 793-2023

| L.W.3 P.W.2 | | |
|---|---|---|
| Name: | சுப்பிரமணியன் | Caste: |
| Father's Name: | ரெங்கசாமி | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:76/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026
(எதிரி 2 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை. ஒன்றாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முன் விசாரணை:**

நான் தற்போது வெள்ளிக்கிடங்கில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். பஞ்சநாதனுக்கும், அவரது பங்காளிக்கும் இடையே அடிபுடி தகராறு நடந்ததாக கேள்விபட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை சாட்சியாக போட்டது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கைரேகை என்னுடையது இல்லை. பின்னிட்டு, போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA-ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் விசாரணை**

குஞ்சிதபாதம் வீடு எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரி. கருணாகரன், குமார் ஆகியோர்களிடமும், அ.சா.1 பஞ்சநாதத்திடமும் நான் நட்பு ரீதியாக பழகி வருகிறேன் என்றால் சரி. கடந்த 02.08.2023 அன்று காலை 11.00 மணியளவில் நானும், எனது ஊரைச் சேர்ந்த சுரேஷ்குமார் என்பவரும் வெள்ளிக்கிடங்கு ரோட்டில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, வாய்மேடு போலிசார் கடந்த 14.10.2022 அன்று எதிரிகளுக்கும், அ.சா.1-க்கும் இடையே நடந்த தகராறு பற்றி விசாரித்து பார்வை மகஜர் தயார் செய்து, படம் வரைந்தார்கள் என்றும், பார்வை மகஜரில் சாட்சியாக நான் கைரேகை செய்ததாகவும் கூறிவிட்டு, தற்போது எதிரிகள் எனது பக்கத்து வீட்டில்

வசித்து வருபவர்கள் என்பதாலும், சங்கதிகளை மறைத்து, எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 01.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**S.T.C. No. 793–2023**

| L.W.4 P.W.3 | | |
|---|---|---|
| Name: | சுரேஷ்குமார் | Caste: |
| Father's Name: | வடிவேல் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:42/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

(எதிரி 2 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை. ஒன்றாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317–இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முன் விசாரணை:**

நான் தற்போது ஆய்மூரில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 02.08.2023 அன்று காலை 11.00 மணியளவில், நான் வெள்ளிக்கிடங்கு கடைத்தெருவில் நான் டீ குடித்துக் கொண்டிருந்தபோது, போலிசார் அ.சா.1–க்கும், எதிரிகளுக்கும் இடையே நடந்த சம்பவம் தொடர்பாக விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பங்களில் எனது கையொப்பம் எதுவுமில்லை. ஆனால், போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டனர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பகுதியாக அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA–ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் விசாரணை**

எதிரிகள் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்றால், 20 கி.மீ. தொலைவிருக்கும். எதிரிகளை விவசாய வேலை பார்க்க வரும்போது எனக்கு நன்றாக தெரியும். கருணாகரன், குமார் வீட்டிற்கு விவசாய வேலைக்கு நான் சென்றுள்ளேன். இனியும், வேலைக்கு கூப்பிட்டால், செல்வேன். எதிரிகள் என்னை வேலைக்கு அழைப்பார்கள் என்பதனால், சங்கதிகளை மட்டும் ஒத்துக் கொண்டு, கையொப்பத்தினை மறுத்தும், எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல.

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 01.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**